மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, ஒத்திவைப்புத் தீர்மான விளக்கத்திற்குப் பிறகு விளக்கம் தேவையில்லையென்றாலும், நான் ஒன்றைத் திரும்பத் திரும்பச் சொல்ல விரும்புகிறேன். சொன்ன நேரத்தில் உடனே சொல்லப்படுகிறது ; இது உண்மையா என்பதை விசாரித்து, நாளை இதைப்பற்றி விவரம் தெரிந்து சொல்கிறேன்.

டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, உண்மையா என்று விசாரிப்பதற்காகத்தான் முதல்வர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவையில்லை என்பதால், இதற்கு இசைவு மறுக்கப்பெறுகிறது.

4. கவன ஈர்ப்பு

திருச்சி மாவட்டம், பள்ளிப்பாளையம் தீ விபத்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : " திருச்சி மாவட்டம் கரூர் தாலுக்கா பள்ளிப்பாளையம் கிராமத்தில் 1981 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 5-ஆம் நாள் அன்று ஏற்பட்ட தீ விபத்தினால் வீடுகள், சொத்து சேதமுற்றது குறித்து " திருவாளர்கள் திரு. எம். சின்னசாமி, ப. செ. [illegible] என்கிற கந்தசாமி ஆகியோர் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளார்கள். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, " திருச்சி மாவட்டம் கரூர் தாலுக்கா, பள்ளிப்பாளையம் கிராமத்தில் 1981 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 5 ஆம் நாள் அன்று ஏற்பட்ட தீ விபத்தினால் வீடுகள், சொத்து சேதமுற்றது குறித்து " மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

1981 மார்ச் 2] [திரு. எஸ். டி. சோமசுந்தரம்]

அறிக்கை.

திருச்சிராப்பள்ளி மாவட்டம், கரூர் தாலுக்கா, பள்ளிப் பாளையம் கிராமத்தில் 1981ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 5ஆம் நாள் அன்று மதியம் சுமார் 3 மணியளவில் தீ விபத்து ஏற் பட்டது. விபத்தில் பாதிக்கப்பட்ட 44 குடியிருப்புகளும் முழு வதுமாகச் சேதமடைந்தன. மொத்தச் சேத மதிப்பு ரூபாய் 1,52,000. தீ விபத்து ஆங்குள்ள ஓர் குடியிருப்பில் உள்ள மின் சார இணைப்பில் ஏற்பட்ட கோளாறினால் (Short circuit) உண்டானது. உயிர் சேதமோ, கால்நடைச் சேதமோ இல்லை. பாதிக்கப்பட்ட 44 குடும்பங்களுக்கு தலா ரூபாய் 200 நிவாரணத் தொகையாக வழங்கப்பட்டது. மேலும், 5 கிலோ அரிசி, ஒரு லிட்டர் மண்ணெண்ணெய் மற்றும் ஒரு வேட்டி, புடவையும் வழங்கப்பட்டது.

திரு எம். சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த தீ விபத்தில் பாதிக்கப்பட்ட அத்தனை பேரும் ஆதி திராவிட இனத்தைச் சேர்ந்தவர்கள். அவர்கள் அத்தனை பேரும் சொந்தமாக வீடு இல்லாதவர்கள். இன்றைக்கு அவர்கள் வீடில்லாமல் தவித்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இவர் களுக்கு, ஆதி திராவிடர்களுக்காக இருக்கிற காரணத்தால், ''தாட்கோ'' மூலமாக முன்னுரிமை அளித்து வீடுகள் கட்டித் தர அரசு முன் வருமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர் களே, தீயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அவர்கள் ஆதி திராவிடர் களாக இருந்தால் இரண்டாயிரம் வரையிலும் வட்டியில்லாக் கடனும், மற்றவர்களுக்கு இரண்டாயிரம் வட்டியுள்ள கடனும் கொடுக்க அரசு உத்திரவிட்டுள்ளது. அந்த 44 குடும்பங்களுக்கும் ரூபாய் 1,000 கொடுக்கச் சொல்லி அரசு உத்திரவிட்டிருக்கிறது.

திரு. ப. செ. சென்னிமலை என்கிற கந்தசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, கிராமத்தில் இருந்த வீட்டிலுள்ள அத்தனை பேர்களும் தங்கள் உடமைகளை இழந்து விட்டார்கள். அவர் களுக்கு அந்த உடமைகள் இல்லை. அவர்கள் விவசாய கூலித் தொழிலாளர்கள். ஆகவே, அவர்களுக்கு உடனடியாக வீடுகள் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர் களே, தீயால் பாதிக்கப்பட்டதால் அவர்களுக்கு உடமைகள் இல்லை என்பதால் தான் வேஷ்டியும், சேலையும், மண்ணெண் ணெயும், அரிசியும் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு ஆயிரம் ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது. அது போதவில்லை என்றால் மனுக்கள் கொடுத்தால் இதற்கு உத்திரவிடப்படும்.